செய்தி வெளியீடு எண் : 475 நாள் : 12.08.2009

# துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது 2009

கடந்த 2003–ஆம் ஆண்டிலிருந்து துணிவு மற்றும் சாகசச் செயல் புரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கல்பனா சாவ்லா விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு ரூ.5,000/– மதிப்புள்ள தங்கமூலாம் பூசிய பதக்கமும், ரூ.5,00,000/– க்கான காசோலையும் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான கல்பனா சாவ்லா விருது மூவருக்கு வழங்கப்படுகிறது. இதற்காக அமைக்கப்பட்ட தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவருக்கும் இந்த விருதினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.8.2009 ஆம் தேதியன்று சுதந்திர தினவிழாவின் போது வழங்குவார்கள்.

சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் மகளிர் சிறப்பு சிறுநீரியல் மற்றும் மறு சீரமைப்புத் துறை தலைமை மருத்துவராக பணிபுரியும் பேராசிரியர் செல்வி ந.இராஜமஹேஸ்வரி அவர்கள் கடந்த 23 வருடங்களாக சேவை செய்து இலட்சக்கணக்கான மகளிருக்கு சிறப்பு அறுவை சிகிச்சைகளையும் வெற்றிகரமாக மேற்கொண்டதோடு, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மருத்துவர்களையும், வெளிநாட்டு மருத்துவர்களையும் உருவாக்கி சாதனை செய்துள்ளார். இவர் கடந்த 2006 ஆம் ஆண்டில், அமெரிக்காவில் தலைசிறந்த மருத்துவ விஞ்ஞான ஸ்காட் அன்ட் ஒய்ட் என்ற நிறுவனத்தால் "பேடன் உரையாளர் விருதும்" 2008 ஆம் ஆண்டில், உலகளவில் மகளிர் சிறப்பு சிறுநீரியில் துறையில் புலமை பெற்றவராக பன்னாட்டு மருத்துவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தைவான் நாட்டில் "உல்பு உல்ம்ஸ்டன் நினைவு சிறப்பு விருதும்" அளிக்கப்பட்டு சிறப்புப் பெற்றவர்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியைச் சார்ந்த செல்வி ஆர்.ராஜலெட்சுமி அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்த மாற்றுத் திறனுடைய சர்வதேச விளையாட்டு வீராங்கனை ஆவார். இவர் சிறுவயதிலேயே போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு வலது கால் ஊனமானவர். கடந்த 2004 ஆம் ஆண்டு மாற்றுத் திறனுடைய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று பெல்ஜியம் நாட்டில் நடைபெற்ற சர்வதேச விளையாட்டுப் போட்டியில், வட்டு எறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு மலேசியா மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் துணிவுடன் பங்கேற்று பல்வேறு பதக்கங்களை பெற்றுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்தவர் திருமதி புஷ்பாஞ்சலி, இவர் கடந்த 23.9.2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட சாலை விபத்தில் மூளைச் சாவுக்குள்ளான திரு ஹிதேந்திரன் தாயார் ஆவார். பெற்று வளர்த்த தனது மகன் இனி உயிர் பிழைப்பதற்கு சாத்தியமில்லை எனத் தெரிந்த ஹிதேந்திரனின் தாயார் தனது மகனின் உடலுறுப்புகளை தானம் செய்து, உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 8 நபர்களுக்கு வாழ்வு அளித்ததன் மூலம், இவரது துணிவு மிக்க செயல் பல எண்ணற்ற உயிர்களை, உடல் உறுப்புகளை தானம் செய்வதால் பிழைக்க வைக்க முடியும் என்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திஅதனைத் தொடர்ந்து பலர் இறந்த தங்கள் உறவினர்களினை உடலுறுப்புகளைத் தானம் செய்ய எடுத்துக்காட்டாக திகழ்ந்தார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9